<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 212/2019</u>

பெயர் : அமுதா D.W.2. Cross

க/பெ. : ஈசாக் பாலகுரு

தேதி : 09.02.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

1. இந்த வழக்கின் பிரதிவாதி எனது கணவர் என்றால் சரிதான். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மாமனார் பெயர் நாகலிங்கம் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது கணவர் கடந்த 07.03.2025 அன்று வாங்கிய சொத்தின் கிரய ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது மகன் யூதாவின் திருமண அழைப்பிதழின் அசல் என்றால் சரிதான். அந்த திருமண அழைப்பிதழின் அசல் **வாசாஆ 16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகைபடங்கானது தொடரிப்பேட்டையில் எனது கணவர் கட்டிய சர்ச் என்றால் சரிதான். அந்த புகைபடங்கள் (எண்ணிக்கை–2) **வாசாஆ 17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாசாஆ 17ல் உள்ள சர்சின் பெயர் கர்மேல் திருச்சபை என்றால் சரிதான்.

2. வாசாஆ 16 ஆன திருமண அழைப்பிதழிலும் எனது கணவர் பெயர் எனது பெயருக்கு கீழ் கர்மேல் திருச்சபை, காழியப்பநல்லூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கர்மேல் திருச்சபை உள்ள இடம் அருள்மிகு சோளீஸ்வரர் சுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அதற்கான கணினி சிட்டா **வாசாஆ 18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாசாஆ 15ல் உள்ள சொத்தின் விபரத்தின் நான்கெல்லையில் வடக்கில் பாலகுரு அனுபவ மனை சர்வே எண். 397/1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்தின் சர்வே எண், நான்கெல்லை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு தெரியாததால் மேற்படி விபரத்தை சொல்லவில்லை.

3. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்திலிருந்து எங்களை வெளியேற்ற கோரி தாக்கல் செய்துள்ளார். நான் எனது நிருபண வாக்குமூல்த்தில் 3வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள்

எதுவும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் குறிப்பிடபடாததால் அந்த சங்கதிகளை புதிதாக வழக்கில் புகுத்த இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள சர்சின் பெயர் Gems Action Centre என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள சர்சினை வாதி 2017ம் ஆண்டு முதல் பூட்டி வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்திலுள்ள சர்சின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் நாங்கள் குடியிருப்பதாக கூறும் வீட்டின் கதவு எண்ணையோ, மின் இணைப்பு எண்ணையோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு நாங்கள் தான் வீட்டு வரி மற்றும் மின் இணைப்பு கட்டணம் செலுத்தி வருகிறோம் என்று எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. வாசாஆ 3ல் உள்ள கையொப்பம் எனது கணவர் கையொப்பம் என்றால் சரிதான் (சாட்சி பின்னர் வாசாஆ 3ல் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பம் இல்லை என கூறுகிறார்). தாவா சொத்தில் இருந்து எனது கணவரை அவர் செய்த தவறுக்காக Gems Action Centre நிறுவனத்தால் கடந்த 10.07.2017க்கு முன்பாகவே அவரை வெளியேற்றிவிடடார்கள் என்றாலும், மேற்படி விபரங்களை நன்கு தெரிந்து கொண்டு தான் வாசாஆ 3ல் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பம் இல்லை என மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள Gems Action Centre என்ற சர்ச் பூட்டப்பட்டுள்ளது என்றாலும், அதில் நானோ, பிரதிவாதியோ குடியிருந்து வரவில்லை என்றாலும், எனது கணவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாசாஆ 16ல் குறிப்பிடப்பட்டுள்ள திருச்சபை முகவரியிலும், வாசாஆ 17ல் கண்டுள்ள இடத்திலும் தான் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது நிருபண வாக்குமூலத்தில் எதையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தை எனது கணவர் 20.10.2017ல் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார் என்றாலும், Gems Action Centre நிறுவனத்தின் நிர்வாக பொறுப்பாளர் என்ற முறையில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண், நான்கெல்லை, விஸ்தீரணம் ஆகியவற்றை பற்றி தெரியாத நான் தாவா சொத்தின் அனுபத்தை பொறுத்து சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இருப்பதால் ஊர்காரர்கள் யாரும் சாட்சியம் அளிக்க வராததால் தான் எனது கணவருக்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்

என்றாலும் எனது கணவருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.